இனிமையான குழந்தைகளே! பாபாவிடமிருந்து சக்தி எடுக்க வேண்டுமெனில் சேவையில் ஈடுபட்டிருங்கள். எந்த குழந்தைகள் அனைத்தையும் தியாகம் செய்து பாபாவுடைய சேவையில் ஈடுபட்டிருக்கிறார்களோ அவர்கள் தான் பிரியமானவர்கள். மனதிலும் இடம் பிடிக்கக் கூடியவர்கள்.

கேள்வி: குழந்தைகளிடம் குஷியானது நிரந்தரமாக ஏன் இருப்பதில்லை அதற்கு காரணம் என்ன?

பதில்: நினைவு செய்யக் கூடிய சமயத்தில் புத்தியானது அலை பாய்கிறது. நிலையான புத்தி யில்லாத காரணத்தினால் குஷியானது இருப்பதில்லை. மாயாவினுடைய புயலானது தீபத்தை அணைய வைக்கின்றது எதுவரை கர்மம், அகர்மமாக மாறவில்லையோ அதுவரை மகிழ்ச்சி (குஷி) நிலையாக இருப்பதில்லை அதனால் குழந்தைகள் இந்தவொரு முயற்சியை செய்ய வேண்டும்.

ஓம் சாந்தி! எப்போது ஓம் சாந்தி என்று சொல்கின்றீர்களோ அப்போது மிக உற்சாகத்துடன் கூற வேண்டும். நான் ஆத்மா சாந்த சொரூபமானவன். அர்த்தம் மிகவும் எளிமையானது தான். பாபாவும் சொல்கின்றார் ஓம் சாந்தி; தாதாவும் சொல்கின்றார் ஓம் சாந்தி, அவர் சொல்கிறார் நான் பரமாத்மா; இவர் சொல்கிறார் நான் ஆத்மா. நீங்கள் அனைவரும் நட்சத்திரங்கள் அனைத்து நட்சத்திரங்களுக்கும் அப்பா தேவை தானே. சூரியன் சந்திரன், அதிர்ஷ்ட நட்சத்திரங்கள் என்ற மகிமை உண்டு. நீங்கள் குழந்தைகள் தான் மிக உயர்ந்த அதிர்ஷ்ட நட்சத்திரங்கள். அவற்றிலும் வரிசைக்கிரமம் உண்டு. எப்படி இரவில் சந்திரன் தென்படும் போது, சில நட்சத்திரங்கள் சரியாகத் தெரியாது, சில நட்சத்திரங்கள் நல்ல பிரகாசமாகத் தெரியும். சில நட்சத்திரங்கள் சந்திரனை விட நன்றாகத் தெரியும். நட்சத்திரங்கள் அல்லவா! நீங்கள் கூட ஞான நட்சத்திரங்கள் தான். இரு புருவ மத்தியில் மின்னக் கூடிய அதிசயமான நட்சத்திரம் பாபா கூறுகின்றார். இந்த நட்சத்திரங்கள் (ஆத்மாக்கள்) மிக அதிசயமானவை. ஒன்று மிக சின்னஞ்சிறிய புள்ளியைப் பற்றி யாருக்கும் தெரியாது. ஆத்மா தான் சரீரம் மூலமாக நடிப்பு நடிக்கின்றது. இது மிகப் பெரிய அதிசயம் தானே! குழந்தைகளிலும் வரிசைக்கிரமமாகத்தான் இருக்கின்றீர்கள்.

ஒவ்வொருவரும் எப்படியெல்லாம் இருக்கின்றனர். பாபா அவர்களுக்கு நினைவூட்டுகின்றார். யார் நன்றாக மின்னக் கூடிய நட்சத்திரமோ, யார் அதிகமாக சேவை செய்கின்றார்களோ அவர் களுக்குத் தான் சக்தி (கரெண்ட்) கிடைத்துக் கொண்டிருக்கிறது. உங்களுடைய பேட்டரியானது சக்திகளால் நிரம்பிக் கொண்டிருக்கிறது. தமோ பிரதானத்திலிருந்து சதோ பிரதானமாக ஆவதற்காக ஒளியானது (சர்ச் லைட்) வரிசைக்கிரமமாக முயற்சியின் அடிப்படையில் கிடைக்கின்றது பாபா கூறுகின்றார், யார் எனக்காக அனைத்தையும் தியாகம் செய்து சேவையில் ஈடுபட்டிருக்கின்றார் களோ, அவர்கள் தான் மிகவும் பிடித்தமானவர்கள். மனதிலும் இடம் பிடிக்கக் கூடியவர்கள். பாபா மனதை கவரக்கூடியவர் அல்லவா! தில்வாலா கோயில் கூட உண்டல்லவா? இப்போது சொல்லுங் கள் தில்வாலா கோவிலா அல்லது மனதை கவரக்கூடிய கோவிலா! யாருடைய மனதை கவரக்கூடியவர்? நீங்கள் பார்த்துள்ளீர்கள் தானே! அங்கே பிரஜாபிதா பிரம்மா இருக்கின்றார் தானே! ஆக,

கண்டிப்பாக அவருக்குள் சிவபாபா பிரவேசமாகியுள்ளார் மேலும் நீங்கள் பார்த்துள்ளீர்கள். கோவிலின் மேல் பகுதியில் சொர்க்கத்தினுடைய ஸ்தாபனையும், கீழே குழந்தைகள் தபஸ்யா நிலையிலும் அமர்ந்துள்ளனர். இது சின்ன ஒரு உதாரணத்திற்காக கட்டப்பட்டுள்ளது. யார் நன்றாக சேவை செய்கின்றனரோ அவர்களே பெரிய உதவியாளர்கள். மகாரதிகள், குதிரைப்படை, தரைப்படையினரும் உண்டு. இந்த கோவிலின் நினைவு சின்னம் மிக நன்றாக துல்லியமாக உருவாக்கப்பட்டுள்ளது. நீங்கள் கூறுகின்றீர்கள் இது நம்முடைய நினைவு சின்னம். இப்போது உங்களுக்கு வெளிச்சம் கிடைத்துள்ளது, வேறு யாருக்கும் ஞானத்தினுடைய மூன்றாவது கண் இல்லை. பக்தி மார்க்கத்தில் எது மனிதர்களுக்கு சொல்லப்பட்டதோ அதை சத்தியம், சத்தியம் என்று நினைத்துக் கொண்டனர். உண்மையில் பொய்யை உண்மை என்று நினைக்கின்றனர். பாபா சத்தியமானவர், அவர் உங்களுக்கு சத்தியத்தைக் கூறுகின்றார் அதன் மூலம் நீங்கள் உலகத்தினுடைய எஜமானன் ஆகின்றீர்கள். பாபா எந்தவொரு முயற்சியும் செய்ய வைப்பதில்லை. முழு மரத்தினுடைய இரகசியமும் உங்களுடைய புத்தியில் உள்ளது. உங்களுக்கு புரிய வைப்பது மிக எளிது தான் இருந்தாலும் ஏன் தாமதமாகின்றது? ஞானம் மற்றும் ஆஸ்தி அடைவதில் தாமதமாவதில்லை. தூய்மைஆவதில் தான் தாமதமாகின்றது. எனவே நினைவு யாத்திரை தான் முக்கியமானது. இங்கு நீங்கள் வரும் போது நினைவு யாத்திரையில் அதிகமான கவனம் கொடுக்கின்றீர்கள். வீட்டிற்கு போகும் போது அந்தளவு கவனம் இருப்பதில்லை. இங்கு அனைவரும் வரிசைக்கிரமம் தான். சிலருக்கு இங்கு இருக்கும் போது புத்தியில் நஷாயிருக்கும் (போதை), நாம் குழந்தைகள், அவர் அப்பா என்று. அப்போது அந்த ஒருவரை தானே நினைவு செய்ய வேண்டும். வேறு யாரிடமும் புத்தி போகக் கூடாது. சந்தேஷியானவர் முழுமையான ரிப்போர்ட் கொடுக்க முடியும். யாருடைய புத்தி வெளியே செல்கின்றது. யார் என்ன செய்கிறார்கள், யாருக்கு கொட்டாவி வருகின்றது என்று அனைத்தையும் சொல்ல முடியும். யார் நல்ல சேவாதாரி நட்சத்திரமோ, அவர்களைத் தான் பார்த்துக் கொண்டிருக்கின்றேன். பாபாவிற்கு அன்பு உண்டல்லவா? ஸ்தாபனை காரியத்தில் உதவி செய்கின்றனர். மீண்டும் போன கல்பத்தைப் போலவே இராஜ்யமானது ஸ்தாபனை ஆகிக் கொண்டிருக்கின்றது. அநேக முறை ஏற்பட்டிருந்தது. நாடகத்தின் சக்கரமானது சுழன்று கொண்டேயிருக்கும். இதில் கவலைக்குண்டான எந்தவொரு விசயமும் இல்லை. பாபாவினுடைய துணை உண்டல்லவா? எனவே சங்கத்தினுடைய பிரபாவம் ஏற்படுகின்றது. கவலை குறைந்துக் கொண்டே செல்கின்றது. இவ்வாறு நாடகம் உருவாக்கப் பட்டுள்ளது. பாபா குழந்தைகளுக்காக சொர்க்கத்தினுடைய இராஜ்யத்தை கொண்டு வந்துள்ளார். பாபா சொல்கின்றார் இனிமையிலும் இனிமையான குழந்தைகளே! பதீதத்திலிருந்து தூய்மை யாவதற்காக தந்தையை நினைவு செய்யுங்கள். இப்போது நீங்கள் வீடு திரும்ப வேண்டும் இதற்காகத் தான் நீங்கள் பக்தி மார்க்கத்தில் தலையை உடைத்துக் கொண்டீர்கள். ஆனால் ஒருவர் கூட போக முடியாது. பாபாவை நினைவு செய்து கொண்டேயிருங்கள் மேலும் சுயதரிசன சக்கரத்தை சுற்றிக் கொண்டேயிருங்கள். அல்லா மற்றும் ஆஸ்தி பாபாவை நினைவு செய்யுங்கள் மேலும் 84 பிறவிச் சக்கரத்தை சுற்றுங்கள் ஆத்மாவில் 84 பிறவியினுடைய ஞானம் உள்ளது. படைப்பவர் மற்றும் படைப்பினுடைய முதல், இடை, கடையைப் பற்றி யாருக்கும் தெரியவில்லை நீங்களும் கூட வரிசைக்கிரமமாக முயற்சியின் அடிப்படையில் தான் அறிந்துள்ளீர்கள். நீங்கள் அதிகாலையில்

எழுந்து புத்தியில் வையுங்கள். நாம் 84 பிறவிச் சக்கரத்தை முடித்துவிட்டோம். இப்போது வீடு திரும்ப வேண்டும். அதனால் பாபாவை நினைவு செய்யுங்கள் அப்போது நீங்கள் சக்கரவர்த்தி ஆவீர்கள். இது சுலபமானது தானே! ஆனால் மாயா உங்களை மறக்கடித்து விடுகின்றது. மாயாவினுடைய புயலானது தீபத்தை அணைய வைக்கின்றது. மாயா மிகப் பெரிய பலசாலி, குழந்தைகளை மறக்கடிக்க வைக்கும் அளவிற்கு மாயாவிற்கு அவ்வளவு சக்தியுண்டு. அந்த மகிழ்ச்சி (குஷி) நிலையாக இருப்பதில்லை. நீங்கள் பாபாவை நினைவு செய்ய அமர்கின்றீர்கள் ஆனால் புத்தியானது சிறிது நேரத்தில் மற்ற விசயத்திற்குப் போய் விடுகின்றது. இவையனைத்தும் குப்தமான கருத்துக்கள் எவ்வளவு தான் முயற்சி செய்தாலும் நினைக்க முடிவதில்லை. இருந்தாலும் கூட சிலருடைய புத்தியானது அலை பாய்ந்தாலும் கூட சிறிது நேரத்தில் நிலையாகிவிடுகின்றது. சிலருக்கு உடனே நிலையாகி விடுகின்றது. சில பேருக்கோ எவ்வளவு தான் தலையை உடைத்துக் கொண்டாலும் கூட புத்தியில் எதுவும் இருப்பதில்லை. இதைத் தான் மாயாவினுடைய யுத்தம் என்று கூறப்படுகின்றது. கர்மம், அகர்மம் ஆவதற்காக எத்தனை முயற்சி செய்ய வேண்டியுள்ளது? அங்கு இராவணனுடைய இராஜ்யமேயில்லை. எனவே கர்மம் விகர்மமாக ஆகாது. தலை கீழான கர்மம் செய்ய வைக்கும் மாயாவே அங்கு இருக்காது. இராவணன் மற்றும் இராமரின் விளையாட்டு. அரைக் கல்பம் இராம இராஜ்யம், அரைக் கல்பம் இராவண ராஜ்யம். பகல் மற்றும் இரவு சங்கம யுகத்தில் பிராமணர்கள் மட்டும்தான் உள்ளனர். இப்போது பிராமணர்களாகிய நீங்கள் புரிந்துள்ளீர்கள் இரவு முடிந்து பகல் வரப்போகின்றது என்று இதை சூத்திர வர்ணமுடையவர்கள் (குலத்தவர்) சிறிதளவும் புரிந்துக் கொள்வதில்லை.

மனிதர்கள் மிகுந்த சப்தத்துடன் பக்தியினுடைய பாட்டை பாடுகின்றனர் நீங்கள் சப்தத்தை கடந்து செல்ல வேண்டும் நீங்கள் தன்னுடைய அப்பாவினுடைய நினைவிலேயே மூழ்கியுள்ளீர்கள். ஆத்மாவிற்கு ஞானத்தினுடைய மூன்றாவது கண் கிடைத்துள்ளது. இப்போது பாபாவை நினைவு செய்ய வேண்டும் என்று ஆத்மா புரிந்துள்ளது. பக்தி மார்க்கத்தில் சிவபாபா, சிவபாபா என்று கூறிக் கொண்டிருந்தீர்கள் சிவனுடைய கோவிலில் சிவனை தந்தை என்று அவசியம் அழைப்பர்; ஞானப் பூர்வமாக அல்ல. இப்போது உங்களுக்கு ஞான முண்டு சிவபாபாவுடைய சித்திரம் இது தான். அவர்களோ லிங்கமாகப் புரிந்துள்ளனர். உங்களுக்கு இப்போது ஞானம் கிடைத்துள்ளது. அவர்கள் லிங்கத்தின் மேல் அபிஷேகம் செய்கின்றனர். பாபா நிராகாரமானவர். நிராகாரருக்கு அபிஷேகம் செய்தால், அவர் என்ன செய்வார்; சாகாரமாக இருந்தால் ஏற்றுக்கொள்வார் நிராகாரருக்கு பாலாபிஷேகம் செய்தால் அவர் என்ன செய்வார்? பாபா கூறுகின்றார் பால் போன்றவற்றை நீங்கள் அபிஷேகம் செய்தால் நீங்கள் தான் குடிக்கின்றீர்கள். பிரசாதம் போன்றவற்றை நீங்கள் தான் உண்கிறீர்கள். இங்கு நான் உங்கள் கண்ணெதிரே இருக்கின்றேன். இதற்கு முன்னால் மறைமுக மாக செய்தீர்கள். இப்போதோ நேரடியாக கீழே வந்து நடிப்பு நடித்துக் கொண்டிருக் கின்றார். வீட்டில் உள்ள வேலைகள் மூலமாக முற்றிலும் அசாந்தி தான் ஏற்பட்டுள்ளது. இந்த சமயத்தில் முழு உலகமும் அசாந்தியாகத் தான் உள்ளது. யோகத்தினுடைய சக்தி மூலமாகத்தான் அமைதி ஸ்தாபனை ஆகிக் கொண்டிருக்கின்றது என்று நீங்கள் தெரிந்துள்ளீர்கள். படிப்பின் மூலமாகத் தான் இராஜ்யமானது கிடைக்கின்றது. போன கல்பமும் இதை நீங்கள் கேட்டீர்கள். இப்பொழுதும் கேட்கின்றீர்கள். எதுவெல்லாம் நடக்கின்றதோ அது மீண்டும்

நடைபெறும். எத்தனை குழந்தைகள் ஆச்சரியப்படும் அளவிற்கு வெளியேறி விட்டனர் என்று பாபா கூறுகின்றார். பிரியதர்ஷனான (மணவாளன்) என்னை எவ்வளவு நினைத்தீர்கள். இப்பொழுது நான் வந்துள்ளேன்; பிறகு என்னை விட்டு விட்டு நீங்கள் சென்று விடுகின்றீர்கள். மாயா எப்பேர்ப்பட்ட அடி கொடுத்து விடுகின்றது. பாபா அனுபவசாலி அல்லவா! பாபாவிற்கு தன்னுடைய வாழ்க்கை கதை முழுவதும் நினைவிலுள்ளது. தலையில் தொப்பி போட்டுக் கொண்டு வெறும் காலுடன் ஓடிக் கொண்டிருந்தார். முஸ்லீம்கள் கூட மிக அன்பு செய்தனர். மிகுந்த உபசரிப்பு கொடுத்தனர். மாஸ்டருடைய குழந்தை வருகின்றார் என்றால் குருவினுடைய குழந்தை மாதிரி கம்பு, ரொட்டி எல்லாம் சாப்பிடக் கொடுத்தனர். இங்கே கூட பாபா 15 நாட்களுக்காக கொடுத்திருந்தார். ரொட்டி மற்றும் மோர் உண்பதற்காக கொடுத்தார். வேறு ஒன்றும் செய்ய வில்லை. நோய்வாய்ப் பட்டவர் களுக்கும் கூட இது தான் தரப்பட்டது. ஆனால் யாருக்கும் ஒன்றும் ஆக வில்லை. வியாதியுடைய குழந்தைகள் கூட குணமாகி விட்டனர். ஆசையானது துண்டிக்கப்பட்டு விட்டதை பாபா அறிந்தார். இது ஏற்பட வேண்டாமா? அல்லது வேண்டுமா? விருப்பம் என்றால் சாதாரண வேலையாட்களை குறிப்பது. கேட்பதைவிட இறப்பதே மேல் என்று பாபா சொல்கின்றார். குழந்தைகளுக்கு எது கொடுக்க வேண்டும் என்று பாபாவிற்குத் தெரியும் எது கொடுக்க வேண்டுமோ அதை அவராகவே கொடுப்பார். இவை அனைத்தும் நாடகத்தில் உருவாக்கப்பட்டுள்ளது.

பாபா கேட்டார், பாபாவை யார் பாபா என்று புரிந்துள்ளீர்கள்? யார் குழந்தையாக புரிந்துள்ளீர்கள், கை உயர்த்துங்கள். அனைவரும் கை உயர்த்தினீர்கள், கையை உடனே உயர்த்தி விட்டீர்கள். எப்படி பாபா கேட்பாரல்லவா இலட்சுமி நாராயணனாக யார் மாறுவீர்கள்? அப்போது உடனே கை உயர்த்தினர். இந்த பரலௌகீகமான குழந்தையை சேர்த்துக் கொள்ளுங்கள். இவர் தாய், தந்தை யருக்கு அதிகமாக சேவை செய்வார். 21 பிறவிக்கு ஆஸ்தி வழங்குவார். பாபா எப்போது வான பிரஸ்த நிலைக்கு செல்கிறாரோ அப்போது தந்தையைப் பாதுகாப்பது குழந்தைகளுடைய கடமை யாகும். அவர்கள் சந்நியாசிகள் போல மாறி விடுவர். எப்படி இவருடைய லௌகீக தந்தையானவர் வானபிரஸ்தி நிலையடையும் போது நான் பனாரஸிற்கு சென்று சத்சங்கம் நடத்த வேண்டும், என்னை அங்கே அழைத்துச் செல்லுங்கள் என்று கூறியிருந்தார். (சரித்திரம் சொல்லவும்) நீங்கள் பிராமணர்கள் பிரஜாபிதா பிரம்மா குமார், குமாரிகள் பிரஜாபிதா பிரம்மா தான் மனித சிருஷ்டியில் அனைவரையும் விட முதல் இலையானவர். இவரை ஞானக் கடல் என்று கூற முடியாது. பிரம்மா, விஷ்ணு, சங்கரும் கூட ஞானக்கடல் இல்லை. சிவபாபா தான் எல்லையற்ற நிராகார் பரம்பிதா பரமாத்மா எப்பொழுது, எப்படி வருவார், அவருடைய ஜெயந்தியானது கொண்டாடப் படுகிறது. இது யாருக்கும் தெரியாது இவர் கர்ப்பத்தில் வருவதில்லை. புரிய வைக்கின்றார். அதிக மான பிறவியின் இறுதி பிறவியில் வானப்பிரஸ்த நிலையில் நான் இவருள் பிரவேசமாகின்றேன். மனிதர்கள் எப்போது சந்நியாசம் செய்கின்றனரோ அதை வானபிரஸ்தி நிலை என்று சொல்லப்படுகின்றது. எனவே பாபா உங்களுக்குக் கூறுகின்றார் - குழந்தைகளே, நீங்கள் முழுமை யாக 84 பிறவி எடுத்து விட்டீர்கள், இது தான் அதிகமான பிறவியின் இறுதி பிறவியாகும். கணக்கு தெரியும் அல்லவா! நான் இவருள் பிரவேசம் செய்துள்ளேன். இவருடைய ஆத்மாவானது எங்கு அமர்ந்துள்ளதோ அவருக்கு அருகில் நான் அமர்கின்றேன். எப்படி குருமார்கள் தன்னுடைய

சிஷ்யனுக்கு முன் சிம்மாசனத்தில் அமர்வார்களோ அதே போல். இவருடைய இடமும் இது தான், என்னுடைய இடமும் இது தான் என சொல்கின்றனர், ஏ, ஆத்மாக்களே! என்னை மட்டும் நினைவு செய்யுங்கள் பாவம் வினாசம் ஆகிவிடும். மனிதனிலிருந்து தேவனாக மாற வேண்டுமல்லவா! இது தான் இராஜயோகம். புது உலகிற்காக அவசியம் இராஜயோகம் தேவை. ஆதிசனாதன தேவி தேவதா தர்மத்தினுடைய அடித்தளத்தை நாட்டுவதற்காக நான் வந்துள்ளேன், என்று பாபா கூறுகின்றார். குருமார்கள் அதிகம், ஒருவர் தான் சத்குரு அவரே சத்தியமானவர். மீதி அனைவரும் பொய்யானவர்கள்.

நீங்கள் அறிவீர்கள் ஒன்று ருத்ர மாலை, இன்னொன்று விஷ்ணுவுடைய வைஜெயந்தி மாலை. அதற்காக தான் நீங்கள் முயற்சி செய்து கொண்டிருக்கிறீர்கள், பாபாவை நினைவு செய்யுங்கள். அப்போது மாலையில் மணியாக முடியும். பக்தி மார்க்கத்தில் எந்த மாலையை உருட்டீனீர்களோ அதைப்பற்றி ஒன்றும் அறியவில்லை அதாவது இந்த மாலை யாருடையது, மேலேயுள்ள மலர் யார், பிறகு மணி யார்? யாருடைய மாலையை உருட்டினீர்களோ அதைப்பற்றி ஒன்றும் தெரிந்திருக்கவில்லை. புரியாமலே இராமா, இராமா என்று கூறிக்கொண்டு மாலையை உருட்டிக் கொண்டிருந்தீர்கள். இராமா, இராமா என்று கூறுவதால் அனைத்தும் இராமரே இராமர் என்று புரிந்து கொண்டீர்கள். சர்வ வியாபி என்ற விசயத்தின் அறியாமை இதிலிருந்து தான் வெளிப்பட்டது. மாலையினுடைய அர்த்தத்தைப்பற்றி அறிந்திருக்கவில்லை. சிலர் கூறுகின்றனர் 100 மாலை உருட்டுங்கள், இத்தனை மாலையை உருட்டுங்கள். பாபா அனுபவசாலி அல்லவா! 12 குருக்கள் இருந்தனர், 12 குருக்களினுடைய அனுபவத்தை எடுத்துக் கொண்டார். இந்த மாதிரி நிறைய பேர் தன்னுடைய குருவை விட்டு, இன்னொரு குருவிடம் அனுபவம் அடைவதற்காக செல்கின்றனர். மாலைகளெல்லாம் உருட்டுகின்றனர். இது முற்றிலும் மூட நம்பிக்கையானது. மாலை உருட்டி முடித்தபிறகு மலருக்கு நமஸ்காரம் செய்கின்றனர். சிவபாபா மலரல்லவா! நீங்கள் நெருங்கிய குழந்தைகள் மாலையினுடைய மணியாகின்றீர்கள். உங்களைத் தான் நினைக்கின்றனர். அவர் களுக்கு ஒன்றும் தெரியாது. அவர்களில் சிலர் இராமர் என்கின்றனர், சிலர் கிருஷ்ணரை நினைக் கின்றனர். அர்த்தமில்லாமல் ஸ்ரீ கிருஷ்ணா சரணம் என்கின்றனர். அவர் தான் சத்யுகத்தினுடைய இளவரசராக இருந்தார். அவருக்கு எப்படி சரணம் செய்வீர்கள் பாபாவிற்கு தான் சரணம் போட வேண்டும். நீங்கள் தான் பூஜிக்கத்தகுந்தவர்கள் மீண்டும் நீங்கள் தான் பூஜாரியாகவும் ஆகின்றீர்கள். 84 பிறவி எடுத்து, தூய்மையற்றவர்களாக ஆகிவிட்டீர்கள். அதனால் சிவபாபாவிற்கு கூறுகின்றனர், ஏ மலரே! எங்களையும் உங்களுக்குச் சமமாக மாற்றுங்கள் .நல்லது.

இனிமையிலும் இனிமையான காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட செல்லமான குழந்தைகளுக்கு தாயும் தந்தையுமாகிய பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே!

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. எந்தவிதமான விருப்பமும் இருக்கக்கூடாது. ஆசையை அழித்துவிடவேண்டும். பாபா என்ன கொடுக்கின்றாரோ... உங்களுக்கு கட்டளை:

கேட்பதை விட இறப்பது மேல்.

2. பாபவிடமிருந்து சர்ச்லைட் (சக்தி) எடுப்பதற்காக ஒரு பாபாவிடம் உண்மையான அன்பு வைக்க வேண்டும். அவர் தந்தை, நாம் அவரின் குழந்தைகள் என்ற போதை புத்தியில் இருக்க வேண்டும். அவருடைய சர்ச்லைட் மூலமாக நாம் தமோபிரதானத்திலிருந்து சதோபிர தானமாக மாறவேண்டும்.

வரதானம் : இரக்க பாவனை மூலமாக நிமித்தமான கருவியாக இருந்து சேவை செய்பவராகி பற்றற்றவராகுக!

நிகழ்காலத்தில் ஆத்மாக்கள் அனைவரும் களைப்படைந்து அவ நம்பிக்கையுடன் கருணை கேட்கின்றனர். வள்ளலின் குழந்தைகள் நீங்கள் தனது சகோதர, சகோதரிகளுக்கு இரக்கம் காண்பியுங் கள். ஒருவர் எவ்வளவு தான் தீயவராயினும் அவர் மீதும் இரக்கம் காட்டுங்கள். ஒருபோதும் வெறுப்பு, பொறாமை, கோபம் இருக்கக்கூடாது. இரக்க மனம் சுலபமாகவே நிமித்த உணர்வை வெளிப்படுத்தும். பற்றின் காரணமாக இரக்கம் வருவதில்லை, மாறாக உண்மையான இரக்கம் பற்றற்ற வராக மாற்றிவிடும். ஏனெனில் அங்கு தேக உணர்வு இருப்பதில்லை.

சுலோகன்: பிறருக்கு ஒத்துழைப்பு தருவதே தனது கணக்கை சேமிப்பு செய்வதாகும்.